(2) அவைக் கூட்டத் தேதியில் மாறுதல்.

MR. CHAIRMAN : I have to announce to the House that the Legislative Council will meet on the 5th April 1973, if necessary, and consider Government Bills.

3. கவன ஈர்ப்பு

"வட ஆற்காடு மாவட்டத்தில் வறட்சி, மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடம் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் நிர்ப்பந்தத்தைத் தவிர்ப்பது, பயிர்வாரி கடனை மத்திய கால கடனாக மாற்றுவது குறித்து.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:—

"வட ஆற்காடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு வறட்சியின் காரணமாகவும் தற்போது மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகவும் விவசாயிகளுக்கு போதிய வருவாய் இல்லாமையினால் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் தீவிரம் காட்டி விவசாயிகள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருப்பதைத் தவிர்க்க, பயிர் வாரி கடனை மத்திய கால கடனாக மாற்ற அரசு ஆணையிட வேண்டுதல் குறித்து."

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டன என்று அறிவிக்கப்பட்ட உடனேயே விளைச்சல் 6 அணுவுக்குக் குறைவாக உள்ள இடங்களிலுள்ள பகுதிகளில் கூட்டுறவுக் கடன்கள் தள்ளி வைக்கப்படவேண்டுமென்று வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, ஜூன் 72 முதல் மார்ச் 73 வரை ரூ. 46,75,000 அளவுக்கு கடன்கள் தள்ளி வைக்கப்பட்டன. மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் விளைச்சல் 6 அணு வுக்குக் குறைவு என்று அணுவாரி சான்றிதழ் வழங்கப்படாமலிருந் தாலும் கூட, கடன் வசூலிப்பதில் கோயர்சிவ் நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடாது என்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. மின் வெட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் தள்ளி வைக்கப் பட்டதோடுமட்டுமல்லாமல் 30—6—1973 வரை கெடுபிடி நட வடிக்கை—கோயர்சிவ் ஆக்ஷன்—மேற்கொள்ள வேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சில சிற்றூர்களில் அரசின் ஆணையைத்

தெரிந்து கொள்ளாமல் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அரசின் கவனத்திற்கு வந்தவுடன், அந்த நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, பல கிராமங்களில் இதைப்போன்ற நிலை இருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்லாமலேயே அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மேலும் இது போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலிருப்பதற்கு விரைவான உத்தரவை அறிவிப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நான் ஏற்கெனவே சொன்னேன். அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. சிற்சில சிற்றூர் களில், அரசு ஆணையைத் தெரிந்துகொள்ளாமலே கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அரசின் கவனத் திற்கு வந்தவுடனே, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் என் கவனத்திற்குக் கொண்டுவந்த அந்த இரண்டு நடவடிக்கைகளும் உடனேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அரசினர் தீர்மானம்

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. "தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இம் மன்றம் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

> "தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இம்மன்றம் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற் கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.